# THE MORNING STAR.

Vol. 63. Jaffna, Thursday 25th of June. 1903. No. 13.

Righteousness Exalteth a Nation but Sin is a Reproach to any People.

**Special Notice.**

Our subscribers are earnestly requested to settle their arrears without any further delay.

*RECEIPTS FOR THE MORNING STAR.*

| | | |
|---|---|---|
| Straits Settlements. | Mr. S. Suppramaniam | 9.00 |
| Matara. | Mr. Waluppilly | 4.00 |
| Mankulam | Dr. S. H. Gnanamuttu | 2.00 |
| Atchnvaly. | Rev. J. M. Sanders and Messrs W. Vytialingam, N. Joseph and S. Vallipuram | 5.00 |
| Lindola | Mr. A. Swaminathapilly | 2.00 |
| Aranaike | Mr. W Ponniah | 2.00 |
| Tellipally | The Maniagar, and Messrs S. Visuvappah, S. Levins, S. Kanapathipilly and R. Ambla | 5.00 |
| Pussellawa | Mr. E. P. E. Chellappah | 2.00 |

## NOTICES.

THE CEYLON STEAMSHIP COMPANY LIMITED.



Lady Havelock and Lady Gordon are appointed to leave for Colombo on the undermentioned dates:—

Via Point Pedro.

S.S. Lady Gordon 15th June 1903 (*Special Trip*)
" " 29th June 1903
" " 13th July "

Via Paumben.

S. S. Lady Havelock 13th June 1903
" " 23rd " "
" " 7th July "

W. MATHER & SON, Agents

### St. John's College.

Classes have been formed in this College for the purpose of preparing candidates for the Cambridge Local Examinations, both Senior and Junior.

For particulars,
Apply to the
Rev. JACOB THOMPSON M. A.
Principal.

THE TAMIL CLASSICAL DICTIONARY
OR

## Abidanakosam.

A cyclopaedia of Tamil and Sanskrit Biography History, Mythology and chronology in Tamil, containing a concise historical and critical account of all Hindu Deities. Superhuman beings, Rishis, Heroes, Rajahs, Patrons, Poets, Literary and Philosophic works, rivers, mountains, cities, forests, &c. found in the Tamil classics, Vedas, Puranas &c.

Complete in full and nicely bound cloth gilt Price Rs. 5.

*Read what the Leading Daily of Madras*—THE HINDU *dated May 2-02. says:—*

"This work is a welcome addition to the slender body of Reference Literature that at present exists in Tamil. Though Jaffna has contributed not a few valuable and important additions to Tamil literature in the remote as well as in the near past in point of general utility to the student of Tamil, none of them can equal the present work of Mr Mootootambypillai. The TAMIL CLASSICAL DICTIONARY is really more comprehensive than its name indicates; and is almost encyclopædic in character, containing as it does article on Tamil authors and their works, their philosophical systems and methods, arts and sciences as they were known to them &c. The first of its kind yet publised. the dictionary, is fairly full and accurate; and the articles and definitions exhibit great scholarship and research. The work contains more than 5000, entries; and it is pleasing to note that the work is free from errors of facts, nor is anything worth mentioning omitted. The articles on 'Tamil' 'Srishti', 'Tiruvalluvar' 'Sanskrit', &c., are excellent reading; in fact almost every article is readable and interesting. We commend the Dictionary to the notice of every Tamil scholar and student of Tamil"

*To be had of*
Mr. A. MOOTOOTAMBY PILLY
Navalarkottam
Jaffna

†

## In Ever Loving Memory

OF
THE LATE,
SAMUEL TAPAN MUTTIAH
Died 23rd June. 1894.

Father in thy gracious keeping
Leave we now Thy servant sleeping

Inserted by his sorrowing wife and children.

Colombo, 20-6-03.

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Remittances can be made Between, Jaffna, Batticaloa, and Colombo Both by wire and Draft

To and From

**Colombo and Jaffna.**

Commission on wire transfer above Rs. 500.00 1°
on wire transfer under " 500.00 2°
on draft on sums above " 500.00 ½°
on draft on sums under " 500.00 1°

**From Jaffna to Batticaloa.**

Commission on wire transfer 1°
Commission on Draft ½°

**Fom Batticaloa to Jaffna.**

Commission on wire transfer 1°
Commission on Draft ½°

To and from

**Colombo & Batticaloa**

Commission on wire transfer 1½°
Commission on Draft and cashing Colombo cheques ¾°/o on sums above Rs. 250.00
1o/o on sums under Rs. 250.00

**From Jaffna to Madras Calcutta & Rangoon**

Commission on Draft } Madras & Calcutta ¾°
Rangoon o/o

| | |
|---|---|
| Colombo Bankers. | The National Bank of India Ltd. |
| Madras | The National Bank of India Ltd. |
| Calcutta | The National Bank of India Ltd. |
| Rangoon | The National Bank of India Ltd. |
| Batticaloa | The Jaffna Commercial Corporation Ltd. |
| Jaffna | The Jaffna Commercial Corporation Ltd. |

WILLIAM MATHER.
Managing Director.

WANTED.

Two experienced Jaffna Overseers for road work to start with not less than 20 Tamil coolies.

Apply to the District Engineer
P. W. D. Matara.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No 1357.

In the matter of the estate of the late Vaitianatar Kanapathipillai of Matakal. Deceased.

Vaitianatar Sithamparapillai of Matakal. Petitioner.

1 Ponnu widow of Kanaparhipillai and
2 Ampalavanar Tilliampalam both of Matakal. Respondents

This matter of the Petition of Vaitianatar Sithamparapillai of Matakal praying for letters of administration to the estate of the above named deceased Vaitianatar Kanapathipillai of Matakal coming on for disposal before W. R. B. Sanders Esquire, District Judge. on the 20th day of May 1903 in the presence of Mr. Tambiah S. Cooke, Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 20th day of May 1903 having been read, it is declared that the Petitioner is one of the heirs of the said intestate and is entitled to have letters of administration to the estate of the said Intestate issued to him unless the respondents or any other person shall on or before the 30th day of June 1903 show sufficient cause to the satisfaction of this Court to the contrary

Signed this 20th day of May 1903 W. R. B. SANDERS. District Judge.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1358

In the Matter of the estate of the late Assana Marakair Sultan Abdulcader of Vannarponnai west. deceased.

Mohamadu Ussan Meerasaibo of Vannarponnai Petitioner

1 Mohiadeen Vakiso Mohamado Sultan and wife
2 Mohamado Meyadeen Nachia of Vannarponnai west Respondents.

This matter of the Petition of Mohamado Ussan Meerasaibo of Vannarponnai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Assana Marakair Assan Sultan Abdulcader coming on for disposal before W. R. B. Sanders Esquire, District Judge, on the 23rd day of May 1903 in the presence of Mr. Tambirh S. Cooke, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 23rd day of May 1903 having been read, it is declared that the Petitioner is one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or before the 30th day of June 1903 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 23rd day of May 1903 W. R. B. SANDERS, District Judge.

ORDER NISI

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction } No. 1863.

In the matter of the late Ponnupillai wife of Kantar Tambiah of Maravanpulo deceased.

Superamaniar Sinnatampi of Kaithadi Petitioner.

1. Sinnatampi Kantar and wife
2. Theivanaipillai of Maravanpulo
3. Superamaniar Tampoo and wife
4. Chellam of Kovilakandi
5. Cantar Thambiah and wife
6. Chinnachippillai of Maravanpulo
7. Sethar Kandiah and wife
8. Muttupillai of do
9. Appapillai Naduviltampi and wife
10. Sadaipillai of Kaithady Navaikully Respondents.

This matter of the petition of Superamaniar Sinnatampi of Kaithadi praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Ponnupillai wife of Kantar Tambiah coming for disposal before W. R. B. Sanders Esquire District Judge, on the 28th day of May 1903 in the presence of Mr. Tampiah S. Cooke proctor on the part of the petitioner and affidavit of the petitioner dated the 21 st day of May 1903 having been read, it is declared that the Petitioner is the creditor of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondents or any other person shall on or before the 10th day of July 1903 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 28th day of May 1903 | W. R. B. SANDERS District Judge

## Local and General.

**Weather.** For the past week the wind has not been so strong, but Jaffna indulges in no doubts as to whether the South west monsoon has set in or not. On the 17th inst. we had a heavy squall lasting for an hour which did some damage in uprooting trees and blowing off the olas from house tops, but to call it, as some have done, a cyclonic storm is wide of the mark.

**Personal.** James Hensman Esq. B.A. returned to his work in Kombakonam Govt. College by the Lady Havelock sailing day before yesterday.

A. M. Chitampalam Esq contemplates living in Jaffna town and carrying on business there. It is said that he has brought up from Colombo Rickshaws for the purpose of encouraging their use in our peninsula.

**Ecclesiastical meeting.** The semi-annual meeting of the Ecclesiastical association composed of pastors preachers and delegates from the churches in connection with the American Mission, will be help at Vaddukoddai on Thursday the 9th prox. A full attendance is desired.

**Govt lands.** The Government will make a serious blunder if it does not encourage the purchasing of lands along the line of the northern railway. The sooner the people are induced to buy land and bring it under cultivation, the better for the earnings of the Northern railway when finally completed and opened for traffic.

**The Pettah Literary Union.** At the last meeting of the Pettah Literary Union held on the 20th June 1903 Mr. N. T. Ratnam B A. delivered a very interesting and instructive lecture on "The physical basis of mental life." Mr. A. Bernard being in the chair introduced the lecturer in eulogistic terms. The meeting had an unusually large attendance. Among those who offered remarks were Messrs. C. G. Hannibalz B. A., S. Vathanayagam, E. R. Sandrasegra, N. R. Ratnam, R. R. Alexander and P. Ponniah. *Com.*

**Railway accident.** On the 17th inst. there was a fatal accident at Kodigamam. The ballast train from Kangesanturai to Elephant Pass collided with some trucks on which coolies were loading railway materials. These trucks it is said, were posted so near the main line that the trucks of the passing ballast train caught hold of the stationary trucks. Two men were killed and several wounded of whom some had limbs broken. An inquiry of the said accident was held by Mr. Prius P.M. on the same day. *Com.*

[Later:—Three of the injured men have since died.]

**Maddu Church.** From last Sunday a large number of pilgrims from Jaffna have been going to the Maddu R. C. church. The church is about a hundred miles from here. *Com*

**Mr T Olegasagaram** We congratulate Mr. Thomas Olegasagaram on his promotion as acting Assistant Collector of Customs. Mr. Thomas is a capable officer with large experience in the Customs work. *Com.*

**The Supreme Court Sessions.** The second sessions for the year will begin on the 1st July proximo. There are four cases for trial, of which one only is from the Police Court of Jaffna. It is likely that the cases from Batticaloa and Trincomalie will be transferred to Jaffna for trial. Mr. Thomas de Sampayo, advocate will be Judge and he was appointed Commissioner of assize for the Northern circuit. *Com.*

**Theft at the Jaffna Post Office.** A Singhalese clerk by name Gunatelakke employed in the Head office Jaffna was arrested and remanded for trial for the theft of a sum of Rs 245 received at the office on the 15th inst. under registered and insured cover addressed to a man of Kockuville named Arumugam. The Post Master is ill and this clerk had his own way disregarding his other superiors in the office. *Com.*

**The Head Clerk Kachcheri.** Mr. J. A. DeNi[illegible] Head clerk has been transferred to Anuradhapura on the present salary and Mr. E. C. La Brooy from Regalla succeeds him. The change will take effect from 1st July. Mr. Chinnappah Head clerk Kachcheri, Trincomalie is coming over to Jaffna as 2nd clerk Jaffna Kachcheri in place of Mr. Lebbe retiring on the 1st July. *Com.*

**Coal for the Railway.** 1500 tons of coal from Calcutta is landed at Kankesanturai from S. S. "Westminister Bridge" The landing has been given on contract to a chetty firm in Jaffna. *Com.*

**Govt. Agent** Mr. J. P. Lewis has come to Jaffna and taken charge of work as Govt. Agent

# உ த ய ❁ தா ர கை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

௯ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், க௯0௫ ம் ௵ ஆனி மீ உ௫ ௳ வியாழக்கிழமை. [சங்கியை, க௩

## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின



புகைக்கப்பல்கள் பின்வரும் தேதிகளில்கொழும்புக்குப்போகவிருக்கின்றன.

| | |
|---|---|
| கோடன் காங்கேயன்றுறையிலிருந்து பருத்தித்துறை வழியாக. | 1903. ஆனி மீ 29௳ |
| | " " |
| | " ஆடி 13 |
| அவலக் காங்கேசன்றுறையிலிருந்து பாம்பன் வழியாக | " ஆனி |
| | " " |
| | " ஆடி 7 |

W" MATHER & SON. Agents

## FOR SALE.

## Brilliants. வயிரக்கல்

சோடு ஒன்று 1 கிருத்து 1½ கிருத்து 2 கிருத்து நிறையுள்ளதாய்க் கடுக்கனுக்கேற்ற நேர்த்தியான வயிரக்கற்கள் (இங்கிலிஷ்கமலம்)விற்பனவுக்கிருக்கின்றன. தேவையானோர்,

**யாழ்ப்பாண வங்காரிடம் வாங்கிக்கொள்ளலாம்.**

### அபிதானகோசம்.

இதற்குமுன்னே எவராலும் தமிழிலே இயற்றப்படாத இவ்வருமையான அகராதி பூரணமாக அச்சிட்டு வெளிவந்துவிட்டது. வேத புராணேதிகாசங்களிலும் தமிழ்நூல்களிலும் கர்ணபாரம்பரிய கதைகளிலுமுள்ள தெய்வங்கள் தேவர்கள் ரிஷிகள் முனிவர்கள் அசுரர்கள் அரசர்கள் வள்ளல்கள் பக்தர்கள சமயாசாரியர்கள் புலவர்கள் வீரர்கள் முதலியோர் பெயர்களும், புண்ணிய நதி மலை வனம் க்ஷேத்திரம் மிருகம் விருட்சம் முதலியவற்றின் பெயர்களும், வேதபுராணேதிகாசங்கள், சாஸ்திரங்கள், தமிழிலக்கணவிலக்கிய நூல்கள் பிரபந்தங்கள் முதலியவற்றின் பெயர்களும், இன்னோரன்னபிறபெயர்களும் அவ்வச் சரித்திரங்களும் வரலாறுகளுமே இந்நூலில் எடுத்து விளக்கப்படுவன. பூர்வ அரசர்கள், சமயாசாரிகள், புலவர்கள் முதலியோரதுகாலங்கள் நன்கு எடுத்து நிச்சயம்பண்ணப்பட்டிருக்கின்றன. புஸ்தகங்கள் உயர்ந்த காகிதத்திலே செம்மையாக அச்சிட்டு கிலிட்டு வேலையோடு கட்டடம் செய்யப்பட்டிருக்கின்றன. விலை ரூபா, 5.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.
நாவலர்கோட்டம்.
யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்.

இத்தாற் சகலருமறியவேண்டியது:

இயாழ்ப்பாணம் கோப்பாய் வடக்குக்குடி கதிரன் அம்பலவன் ஆகியநான் வெளியரங்கப்படுத்தி அறிவிப்பதென்னவெனில், எனதுசகோதரன் கோப்பாய்வடக்குக்குடி கதிரன் வேலன் 1903 ம் ஆண்டு ஆனிமாசம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை இரவு மரித்துவிட்டாரென்றும், அவருடைய ஆஸ்திகளின்பேரால் எதுமொரு சாதனத்தை முடித்துக்கொள்ளாதவராய் நினையாப்பிரகாரம் காலஞ்சென்றுவிட்டார். அவர் தேடிய சகல அசைவுள்ள அசைவற்றஆஸ்திகளும் முதுசொம்களும் உரிமைகளும் கதிரன் அம்பலவன் ஆகிய எனக்கேயுரியவைகளென்றும் இத்தாலறிவிக்கின்றேன். இன்னும் அறிவிப்பதென்னவானல,

இயாழ்ப்பாணம் எந்த நொத்தாரிசாவது மற்றியாரென்கிலும் எனது சகோதரன் கதிரன்வேலனுடைய ஆஸ்திகள் ஆதனங்களின்பேரால் அறுதி, ஒற்றி, நன்கொடை, நோட்டுமுதலிய எவ்வகைக்கட்டுப்பாடுஞ் செய்யக்கூடாதென்றும் மேற்படி திகதிக்குப் பின் வெளிப்படும் எவ்வகைச்சாதனங்களுக்கும் நான்தடைகாரனென்பதையும் இத்தால் விளம்பரப்படுத்திநிற்கிறேன்.

இப்படிக்கு, கீறல் + கதிரன் அம்பலவன்.
கோப்பாய், 1903 ம் ௵ ஆனி மீ 18 திகதி.

### Hunt Memorial Funt.

முன்விளம்பரப்படுத்தியபடி, சென்றவைகாசிமீ 28 ௳ உடுவிலிலே வைக்கப்பட்ட கூட்டத்திலே காலஞ்சென்ற கனம். ரீ. பி. அன்றுப்போதகரது ஞாபகத்துக்காய் ஓர் பணமுதல்சேர்த்து அதன்வட்டியைக்கொண்டு சில பிள்ளைகள் (தொகைக்குர்தக்கதாய்) யாழ்ப்பாணக்கல்லூரி, தெல்லிப்பழைப் போதனாசக்தி வித்தியாசாலை, உடுவிற்பெண்பாடசாலை ஆகிய பாடசாலைகளிற் படிப்பிக்கவேண்டுமென்று யோசனைசெய்யப்பட்டு, அதற்கேற்ற ஒழுங்குகள்செய்து காரியங்களைநடப்பிப்பதற்காய்ப் பின்னுற்சொல்லப்படுபவர்கள் கொம்மிற்றிமாராய் நியமிக்கப்பட்டனர்.

ரீ. ரீ. எஸ். இளையதம்பிப்போதகர்.
உவில்லியம் மேதர்.
எ. சீ. கேட்டிஸ் டக்தர்.
ஜே. கே. சின்னத்தம்பி ஆசிரியர்.
ரீ. எஸ். குக் பிரக்கிராசியார்.

போதகரது ஞாபகத்தை நிலைநிறுத்த விரும்பும் சுற்றமித்திரர் தாம் கொடுக்கஎண்ணும் பணத்தைக் கொம்மிற்றிமாரில் யாருக்காவது அனுப்பலாம். பணங்கொடுப்போர்நாமங்கள் இப்பத்திரிகைவழியாய் வெளிப்படுத்தப்படும்.

W. Mather.
பொக்கிஷகாரன்.

## உ த ய த ா ர கை.

க௯0௫ம் ௵ ஆனி மீ உ௫ ௳.

### புகையிலை குடித்தல்.
### Tobacco Smoking.

இலங்கைஅரசாட்சி வித்தியாபகுதித் தலைவராகிய மெஸ். ஜே. காவாட் அவர்கள், பாடசாலை முகாமைக்காரர்களுக்கு ஓர் சுற்றுநிருபம்அனுப்பி இளைஞர்கள் புகையிலைகுடிக்கும்பழக்கத்தைத் தவிர்க்கவேண்டுமெனக் கேட்டிருக்கின்றனர். இது பாடசாலை முகாமைக்காரராகிய மனேச்சர்மார், உபாத்திமார் மாத்திரமன்று, பிள்ளைகளைப் பாதுகாப்பவர்களாகிய பிதா, மாதா. சகோதரரானஎல்லாருங்கவனிக்கவேண்டியவிஷயமாம். அந்நிருபம் வருமாறு:

பாடசாலைமுகாமைக்காரருக்கனுப்பும் சுற்றுநிருபம்.

இலங்கையின் அனேக பகுதிகளில், முக்கியமாய்ப் பட்டினங்களிலும் கடலையடுத்தநாடுகளிலும் பிள்ளைகளுக்குள் ஆக இளம்வயதிலேயே சுருட்டுக்குடிக்கும் பழக்கம் வரவர அதிகரிப்பதைக்கண்டுவருகிறேன். பையன்கள்மட்டுமல்ல, ஆறு எழு வயசுக் குழந்தைகளும் சிகரற்று அல்லது யாழ்ப்பாணச்சுருட்டுக்குடிப்பதை எப்போதுங் காணலாம். பாலிய வயசில் சுருட்டுக்குடிக்கும் வழக்கம் ஒருவனது சரீரத்துக்கும் நடத்தைக்கும் மிகவுங் கெடுதியை விளைவிக்கும். அது மனுஷனுடைய வளர்ச்சிக்கும் பலத்துக்கும் இடையூறாயிருப்பதைவிட, அவனைக் கெட்டவழிகளிலேவித் தீதொழில்புரிவிக்கவும் ஆதாரமாயிருக்கும்.

பெரியபிரித்தானியா, அவுஸ்திரேலியா ஐக்கியநாடுகள், யாப்பான் முதலிய தேசங்களிலே பலமும் வீரமுமுள்ள மனுஷரைத்தோற்றுவிக்கக்கருதி பாலியர் புகையிலைகுடிப்பதை விலக்கக் கடின சட்டங்களை ஏற்படுத்தியும், ஏற்படுத்த ஆரம்பித்துமிருக்கிறார்கள்,

உபாத்தியாயர்கள் தங்கள் முழு அதிகாரத்தினாலும் சிறுவரிடத்தே காணப்படும் இப்பழக்கத்தை மறிகத் தெண்டிக்கவேண்டியதுமாத்திரமன்றி பெற்றோர்மட்டிலும் அது கடமையென்பதை அவர்களுக்கு உணர்த்திவரவும் வேண்டியது. இங்ஙனம்,

ஜே. காவேட்.
வித்தியாகர்த்தர்.

புகையிலையைப் பாவித்தல் வளர்ந்தவர்களுக்கேயாகாதென்பது வைத்தியர்களும் அநுபவசாலிகளுங்சொடுக்குஞ் சாட்சி. புகையிலைச்சாரத்தைப் பூனை, எலி, கோழியாதிய பிராணிகள் உட்கொள்ளச் செய்யும்போது அவைகள் விழுந்து புரண்டு செத்துப்போகின்றனவெனப் பரிசோதனைகள்செய்து கண்டிருக்கிறார்கள். புகையிலையின் நஞ்சானது மனித தேகத்திற் செறியும்போது அது உடம்பின் வளர்ச்சியைக் கெடுத்து, தேககுளிர்ச்சியையழித்து வரட்சியையுண்டாக்கி, இரத்தாசயத்தைப் பெலவீனப்படுத்தி, நரம்புப் பெலவீனத்தையுண்டாக்கி, மூளையையுந் தாக்கிவிடுகின்றது. ஒருவன் முதன்முதற்புகையிலைகுடிக்கும்போது, அல்லது புகையிலையுடன் வைக்கப்பட்ட பாக்கைத்தானும் தின்னும்போது அவனுக்குத் தலைக்கிறுதி, உவாந்தி, குறுவெயர்வை, ஆயாசம், நெஞ்சிடிப்பு ஆதியகுணங்கள் காணப்படுகின்றனவன்றோ? இதுவே புகையிலை அதிக நஞ்சுள்ளபதார்த்தமென்பதற்கும் மனுஷ தத்துவங்களைக் கெடுக்குந் தன்மையுள்ளதென்பதற்கும் போதிய அத்தாட்சியாகும்.

கணபுகையும் நெஞ்சுலருங் கைகாலயர்த்துவரும்
வெண்பெரியமேனி வெளுத்துவரும்—ஒண்டொடீநீ
ஈறற்கருகிவரும் இந்திரியநட்டமாம்
பாரப்புகையிலையின்பண்பு.

எனப் பதார்த்தகுணசிந்தாமணிகூறுகின்றது.

பெரியவர்களுக்கே யிவ்வளவு கெடுதியை விளைக்கும் புகையிலை பாலர்களுக்கு எவ்வளவு மோசத்தையுண்டாக்கும். மினுமினுப்பாய்ப் பூரித்து வளரவேண்டிய தேகம் சுருக்கணித்து, வரண்டு, பெலன்கெட்டுப்போகின்றது. மூளைவரண்டு புத்திமழுங்கிப்போகின்றது. இம்மட்டோ! புகையிலைநஞ்சு இளைஞரின் தேகத்திலே வேறு துன்மார்க்க பழக்கங்களுக்கேவுதல் கொடுக்கும் வித்தைப்பதித்துவிடுகின்றது. கஞ்சா, அபின், சாராயம், ஆதிய மஸ்துப்பதார்த்தங்களைப் பாவித்துக் குடிவெறியர், விபசாரர், தூர்த்தர், துன்மார்க்கராவதற்கும் இதுவே காலாகுமெனல் வழுவாகாது. ஆகையால் பாடசாலை உபாத்திமார்மாத்திரமன்று பெற்றோரும் பிள்ளைகளைப் பாதுகாக்கும் மற்றோரும் இளைஞர் இப்பழக்கத்துக்குள்ளாகாது தவிர்க்கவேண்டியது அத்தியாவசியகமாம். நம்மூரிலே குடிவெறியதிகப்படுகின்றதேயெனஅதிகவலைகொண்டு முயற்சிப்படுவோர்பலர் புகையிலை பாவிப்புவிஷயத்திற் கவலையற்றிருப்பது நூதனம்.

பள்ளிக்கூட மனேச்சர்மாரும்உபாத்திமாரும் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற் றடுத்தாளுதல்கூடுமன்றி, வீட்டிலேயவர்கள் புகையிலை பாவிப்பதைத்தடுத்தல்கூடாது. தம் பிள்ளைகள் புகையிலைபாவிக்க இடங்கொடுத்தல்வேண்டுமெனப் பெற்றோர்சிலர் உபாத்திமாருடன் வழக்காடிய சங்கதி யறிவோம். வைகுரிப்பால்வைத்தலாதிய சிலவிஷயங்களில் அறிவீனராயிருக்கும் பெற்றோரைஇராச்சியசட்டமூலமாய்க்கட்டாயம்பண்ணிநடத்தல்போல, இளைஞர் புகையிலைபாவிக்கும்வழக்கத்தையும் ஆளுகைச்சட்டமூலமாய்த்தவிர்த்தல் புத்தியாகுமென்று நினைக்கின்றோம். பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஐக்கியநாடுகள், யாப்பான் ஆதிய தேசங்களில் அவ்வித சட்டங்களிருக்கின்றன. நம்முடைய தேசத்திலும் அவ்விதசட்டங்களுண்டாக்கப்படுவதற்கு முயற்சிசெய்வது தேசாபிமானிகள் யாவர்மேலும்விழுந்தகடமையாகும்.

### மாலைதீவு விஷயம்.
### Maldivian Affairs.

எகிப்துக்குச் சென்று திரும்பிய சுலுத்தான் தமது நாடாகிய மாலைதீவுக்கரைசேர்ந்தபோது, புதிய சுலுத்தானொருவர் ஆளுகைசெய்வதையும, தன்னை யொருவரும் அங்கீகரியாதிருப்பதையுங் கண்டு திரும்பிக் கொழும்புக்குவந்துவிட்டனரென முன்னொருமுறை தெரிவித்தோம். இவ்விஷயத்தைச்குறித்துச் சட்டநிருபணசபையிலே கேள்வியெழும்பியபோது தேசாதிபதியவர்கள் விடையாக, இந்தப் பழய சுலுத்தான் தமது புத்தியீனமான நடையினாலே மாலைதீவின் சனங்களாற் றள்ளப்பட்டுப்போயினரென்றும், உத்தரவின்றித் தமது மந்திரிமாருள் ஒருவர்பொறுப்பில் ஆளுகையை விட்டு எகிப்துக்குப் பிரயாணமாயினரென்றும், எகிப்திலே ஓர் விவாகஞ்செய்வதற்காக, சனங்களின் நன்மைக்காய்ச் செலவுசெய்யவேண்டிய பணத்தையெல்லாஞ் செலவுசெய்தனரென்றும். அந்தப் புதிய மனைவியைக் கொழும்பில்வைத்து அதிகபணஞ்செலவழித்துத் தாபரிக்கவேண்டியவராயிருக்கின்றனரென்றும், கொலோனியல் சக்கிடத்தார் மாலைதீவுகளுக்குச் சென்று காரியங்களை விசாரணைசெய்தபோது இவரைஒருவரும் விரும்பவில்லையென்றும், புதியசுலுத்தானை எல்லாருஞ் சந்தோஷமாயேற்றுநடக்கின்றனரென்றும், அவரைஅனுமதித்துநடத்துவதே இலங்கையரசினரின் விருப்பமும் தீர்மானமுமென்றும், இங்கிலிஷ் கற்பித்தானொருவர்மேலே வீண்வழக்குகள் வைத்து நடத்துபவரும், இலங்கையரசினர்க்கெதிராயும் வழக்குகள்நடத்திவருபவருமாகிய டாடபாய் என்னுமொருவரைத் தமது ஆலோசனைக்காரராக்கிநடத்தினாலேயே பழயசுலுத்தானுக்கு இந்த கட்டங்களெல்லாம்வந்தனவென்றும், மாலைதீவிலே யிவர்க்குப் புறம்பாயோர் வீடு சமைத்துக்கொடுத்து ஓர் இராசபுத்திரரைப்போல சம்பளம்கொடுத்துநடத்தப் புதிய சுலுத்தானும்மந்திரிமாரும் பிரியமாயிருக்கிறார்களென்றும், இவருக்கு ஒழுங்காய்ச் சம்பளங்கிடைக்கும்படி ஒழுங்குகள் செய்யப்படுகின்றனவாயினும் மாலைதீவிலே புதியமாளிகையிலே வசிக்க இடங்கொடுப்பது புத்தியோவென்பதைப்பற்றித் தாம் இன்னுந் தீர்மானஞ் செய்யவில்லையென்றும் கூறினர்.

மாலைதீவுகள் 1883ம் ஆண்டு இலங்கைஅரசாட்சியாரின் மேற்பார்வைக்குள்ளாயின. ஆளுகைசெய்துகொண்டுவந்த சுலுத்தானாகிய நூபின் எனபவர் 1892 ம் ஆண்டு மரித்துப்போக, வழக்கப்படிபட்டத்துக்குவரவேண்டிய அவரது மூத்த புத்திரராகிய சம்சடீன் 17 வயசுள்ள இளைஞனாயிருந்தார். இவர் ஆளுகை நடத்துதற்கேற்ற வயசுள்ளவராய் வரும்வரைக்கும் பிரதியாளாய் ஆளுகைசெய்யும்படி இறந்த சுலுத்தானின் தமயன் புத்திரரும இப்போது தள்ளப்பட்டிருப்பவருமாகிய இமடீன் என்பவர் நியமிக்கப்பட்டு சென்ற 11 வருடகாலமாய் ஆளுகைநடத்தினர். பட்டத்துக்குரிய ராசகுமாரன் இராச்சியத்தைத் தமதுகையிலொப்புவிக்கும்படி பலமுறைகேட்டும் இவர் காலத்தைப் பின்போட்டுவந்து, சேர் ஆதர் கவலக் தேசாதிபதியாயிருந்தகாலத்தில் தாமே பட்டத்துக்குரியவரென்று இலங்கையரசினர் ஏற்றுக்கொள்ளும்படிசெய்து தமதுஉரித்தைப் பெலப்படுத்திக்கொண்டனர். பட்டத்துக்குரிய இராசகுமாரன் ஒடுக்கப்பட்டு யுதிஷ்டிரருமளவும் வாயிருந்து கொக்குப்போல அமைதியாயிருந்து இசமயம்நிற் சுலுத்தான் பதிலாய்வைத்தவரைத் தாத்திச் சனங்களின் பிரியத்தோடு தாமே சிம்மாசனபதியாயினர். பழயசுலுத்தானின் நடைப்பிசகால் இலங்கையரசாட்சியாரும் சனங்களின் விருப்பத்துக்கிசைந்து புதியசுலுத்தானையே ஆளுகைஅதிபதியாயேற்றுக்கொள்ளவேண்டியவராயினர்.

### சட்டநிருபணசபை.
### Legislative Council.

சென்ற 15 ந் திகதி கூடியசட்டநிருபணசபையிலே தமிழ்ப் பிரதிநிதியாகிய கௌரவ டக்டர் றௌக்குவுட் அவர்களாற் துவக்கப்பட்ட மாலைதீவுக்காரியங்களோடு வேறும்பலவிஷயங்களெடுத்துப் பேசப்பட்டன.

பேகர்பிரதிநிதியாகிய கௌரவ லூஸ் அவர்கள், ஆதரவற்றோரான விதவைகளுக்கும் அநாதபிள்ளைகளுக்கும் உபகாரச்சம்பளங் கொடுப்பதற்கா யேற்படுத்தப்பட்டு நடத்தப்படும்முதல், இன்னும் அனேகர்க்குப் பயன்படுமாறு சில திருத்தங்கள்செய்து நடத்துவதற்கு முயற்சிசெய்யப்படுகிறதாவெனக் கேட்க, கொலொனியல்ச

க்கிடுத்தார் அவ்விஷயத்திற் சிலமாறுதல்கள் செய்யும் நோக்கமாய்க் கலனிகளின் இராசமாலிகிதர்க்குக் கடிதமனுப்பப்பட்டிருக்கின்றதென்றும் மறுமொழிவந்தபின்னரே அலதப்பற்றிய விபரங்கள் கொடுக்கப்படுமென்றுங் கூறினர்.

கீழ்நாட்டுச் சிங்களர்பிரதிநிதியாகிய கௌரவ அபயசேகர அவர்கள், அபின்விற்பனவுகுறைக்கப்படல்வேண்டுமென்னுஞ் சனங்களின் விருப்பப்படி சென்ற எட்டுவருடங்களுக்குள்ளாகப் புதிதாய் லைசென்ஸ் முடிக்கப்பட்ட அபின்கடைகளெல்லாம் இவ்வருடமுடிவோடு நிறுத்தப்படல்வேண்டுமென்றும் அரசாட்சிவருமானங் குறைந்தாலும் அபின் விற்பனவு குறைக்கப்படல்வேண்டுமென்றும் பிரேரிக்க, மேல்நாட்டுச் சிங்களர்பிரதிநிதி மெஸ். உலுகல்லா, ஐரோப்பியர்பிரதிநிதி மெஸ். பேர்கசன், பேகர்பிரதிநிதி மெஸ். லூஸ் என்பவர்கள் சார்புகூறியும், மிகுதியானோர் எதிர்ப்பக்கமாய் நின்றமையால் அவரின் கேள்வி வாய்க்கவில்லை.

ஐரோப்பியர் பிரதிநிதியாகிய கௌரவ பேர்கசன் அவர்களெழுந்து இலங்கைச் சட்டநிரூபணசபைக்குப் பிரதிநிதிகளை நியமிக்கும்முறையிற் சில திருத்தங்கள் செய்யப்படுவதற்காய், இந்தியாவின் சிலபகுதிகளிலே சனப்பிரதிநிதிகளை தெரிவுசெய்வதில் அனுசரிக்கப்படும் ஒழுங்குகளைப்பற்றி இலங்கையரசாட்சியார் இந்தியஅரசாட்சியாருக்கெழுதி அறிவது நல்லதெனக்கூற, உபதேசாதிபதி மெஸ். இம்தேண் அவர்களெழுந்து, சட்டநிரூபணசபைத்திருத்தங்களைப்பற்றிச் சிலகாரியங்களைக்குறித்து கலனிகளின் ராசமாலிகிதர்க்கு நிருபமனுப்பப்பட்டிருக்கின்றதென்றும், அதன்மறுமொழிவந்தபின்பே இவ்விஷயங்கவனிக்கப்படுமென்றுங்கூறினர்

மெஸ். பேர்கசன் மறுபடியுமெழுந்து புதிதாய்த் திறக்கப்படும் வடமாகாணப் புகைவீதிக்கணித்தாய், திருத்தப்பட்ட குளங்களால் நீர்ப்பாய்ச்சப்படக்கூடியநிலங்களை, நெல்லு, பருத்தி, கரும்பு ஆகியனவற்றைச் செய்கைபண்ணும்நோக்கமாய் அல்லது யாடாடுகுதிரைகளை மேய்க்கும்நோக்கமாய் வாங்கவிரும்பும் தனியாட்களுக்கு அல்லது கொம்பனிகளுக்கு என்ன விலைகள் நிபந்தனைகளோடு நிலம்விற்கப்படவேண்டுமென்றும், திருத்தப்படுங் குளங்களைபடுத்துச் சுதேசிகளைக் குடியேற்றும்வகையெப்படியென்றும் அரசாட்சியார் என்னென்ன தீர்மானஞ்செய்திருக்கின்றனரெனக் கேட்க, கொலோனியல்சக்கிடுத்தாரெழுந்து அரசாட்சியாரிவ்விஷயத்தில் யோசனைசெய்கின்றனரென்றும், சில கிழமைகளின்முன் கண்டியிற்கூடிய எசண்டர்மார்சபையிலுமிவ்விஷயம் யோசிக்கப்பட்டதென்றும், நிலம்வாங்க விரும்புவோரெழுதிக்கேட்டால் அரசாட்சியார்வற்றவொழுங்குகளோடுநிலங்களைவிற்கக்கூடுமென்றுங்கூறினர்.

## சுதேசவர்த்தமானம்.

## Local News.

காலநிலை.—Weather.—சென்ற 16 ந் திகதி யிரவு பெரும்மழையோடு ஒரு சிறுபுயலும் வீசிற்று. சிலவிடங்களில் மரங்கள் வேலிகள் சாய்ந்தன. அதன்பின் அமைதியாயிருந்த சோழகக்காற்று மறுபடியுந்தொடங்கி வீசுகின்றது.

புகைவண்டி அபாயம்.—Train accident.—சென்றகிழமை கொடிகாமத்துக்கணித்தாய்ப் புகைவீதிச்சாமான் ஏற்றிக்கொண்டுநின்ற பாரவண்டிலில் கல்லேற்றிச்சென்ற வண்டிகள் மோதினமையால் கல்லேற்றிக்கொண்டுநின்ற கூலிச்சனங்களில் மூவர் நெரிக்கப்பட்டு உடனேமரிக்க, பதினேழுபேர் காயமவாங்கினரெனக்கேள்விப்படுவேது அதிதயரத்தாஞ் சங்கதி. பாரவண்டில் பாதைமாறி நின்றுகல்லேற்றியதே இந்தமோசத்துக்குக்காரணமாம்.

தபாற்கந்தோர்க்களவு -Post Office defalcation- மாத்துறையிலிருக்குமொருவன் ஓர்தவாலில் 250 ரூபா நோட்டுகளைவைத்துப்பதிவுசெய்து கொக்குவிலிலிருக்கும் தனது இனத்தவனுக்கு அனுப்பியிருந்தான். இவன் யாழ்ப்பாணத்தவாற்கந்தோர்சென்றுதபாலைவாங்கித் திறந்துபார்த்தபோது 5 ரூபாமாத்திரமிருக்கக்கண்டு உடனே தபாற்கந்தோர்த்தலைவருக்கறிவித்தனன். தலைவர் உடனே மாத்துறைத்தபாற்கந்தோரதிபர்க்குத் தந்திமூலஞ்செய்தியனுப்பி, பதிவுசெய்தனுப்பப்பட்ட நோட்டுகளினிலக்கங்களையறிந்து விசாரணை நடத்தியபோது, தபாற்கந்தோரிற் கிளாக்காயிருக்கும் குணதிலக என்னும் சிங்களவாலிபனின் வீட்டில் அந்தஇலக்கமுள்ள நோட்டுகளிலொன்று கண்டுபிடிக்கப்பட்டது. மற்றநோட்டுக்கள் தபாற்கந்தோரில் விலைகொடுத்தெடுக்கும்படிஅனுப்பப்பட்ட சாமான்களுக்காக அறவிடப்பட்டபணத்துட்காணப்பட்டனவாம். மறியற்படுத்தப்பட்டிருக்கும் குணத்திலக தனக்குமேலதிகாரியான டெப்பியூற்றி போஸ்ற்மாஸ்றரையுந்தொழுவுகின்றனனும்.

சுப்பிறீங்கோடு.—Supreme Court.—இவ்வருடத்துக்குரிய இரண்டாம் சுப்பிறீங்கோட்டு நீதி விசாரணை ஆடி மீ 1 ந் திகதி ஆரம்பமாகும். கொழும்புப்பிரபல அப்புக்காத்துமாரிலொருவரும் K. C. என்னும்பட்டமளிக்கப்பெற்றவருமாகிய மெஸ். சம்பாயோ சுப்பிறீங்கோட்டுக்கம்மிஷனராய்நியமனம்பெற்று நீதிபதியாய் விளக்கம் நடத்திவருகின்றனர்.

ஆட்கள்.—Personal.—யாழ்ப்பாண ரேசத்தலைமைக்கிளாக் மெஸ். உலகசேகரம் அவர்கள், வடமாகாண உதவிக்கலெக்றராய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பு நகரசங்கத்திற் சென்ற 25 வருடங்களாய் அங்கத்தவராயிருந்து கடமைபார்த்தவராகிய பிறக்தர் மெஸ். பொ. குமாரசாமி அவர்கள் அவ்வேலையை விட்டிளைப்பாற அவருடைய இடத்தில் கொழும்பிலுள்ள பிரபல பிறக்தர்மாருளொருவரான மெஸ். திருவிளங்கம் தெரிவுசெய்யப்பட்டனர்.

புதிய எசண்டர் மெஸ். லூயிஸ் கண்டியிலிருந்து மத்தியரேட்டுமொர்க்கமாய் யாழ்ப்பாணம் வந்து தங்கடமையையேற்றனர். மெஸ். ஐவேஷ், சிங்கப்பூர், நியுகின்னி அவுஸ்திரேலியா ஆகியாமிடங்களைத் தரிசித்துக்கொண்டு தஸ்மானியாவுக்குச்சென்று பினபூமியைச் சுற்றி அமரிக்காஐரோப்பா என்னும்தேசங்களூக்கூடாய்த்திரும்பி வருவாராம்.

யாழ்ப்பாணத்தபாற்கந்தோரதிபரான மெஸ். சமரசிங்குமுதலியார் பிள்ளைவருத்தத்தில் அதி அக்குத்தான நிலையிலிருக்கின்றனர்.

மட்டக்களப்பு உப்புக்கந்தோரில் வேலைபார்த்தவராகிய மெஸ். சி. பொன்னையாவுக்கெதிராய் டிஸ்திறிக் கோட்டில் விதிக்கப்பட்ட இரண்டுவருடமறியற்றீர்ப்பு சுப்பிறீங்கோட்டிற் தள்ளப்பட்டுப்போயிற்றெனத்தந்திச்செய்தி யெட்டிற்று.

பேசாலையில்வைத்தியராயிருந்தவராகிய டக்தர் என். எல். யோசுவா பழையிலேயுள்ள கிளிநோச்சிவைத்தியசாலைக்கும், மாந்தோட்டையிலிருந்தவராகிய டக்தர் ஆர். எஸ். அடம்ஸ் மாங்குளவைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டனர்.

சேன்லூயிசர்வபொருட்காட்சிக்கம்மிஷனராய்ச்செல்லும் மெஸ். ஸ்ருன்லிபோயிஸ் என்பவருக் குதவியாளாய் அனுராசபுரக் கச்சேரித்தலைமைக்கிளாக் மெஸ். ஸறவுற்றர் செல்கின்றமையால் அவருடைய இடத்தில் ஆடி மீ 1 ந் திகதியோடு யாழ்ப்பாணக்கச்சேரித்தலைமைக்கிளாக் மெஸ். டீனீசும், இவருடைய இடத்தில் கேகாலைக்கச்சேரித்தலைமைக்கிளாக் மெஸ். லாபுறாயியும் கடமைபார்க்கும்படி நியமிக்கப்பட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணக்கச்சேரியில் இரண்டாங்கிளாக்காயிருந்திளைப்பாறிய மெஸ். லெப்பியினிடத்துக்கு, திரிகோணமலைக்கச்சேரித்தலைமைக்கிளாக்காயிருந்தமெஸ். சின்னப்பா அவர்கள் நியமிக்கப்பட்டனர்.

அனுராசபுரக்கலகம்.—Riot at Anuradapura.—அனுராசபுரத்திலுள்ள புத்தஆலயத்துக்கு யாத்திரைசென்றிருந்த சனங்கள் சென்ற 9 ந் திகதி பெருங்கலகம் விளைத்து, அங்கிருந்த ஓர் கத்தோலிக்க குருவானவரை அடித்துக்காயப்படுத்தி, கத்தோலிக்க ஆலயத்தையும், வீட்டையும், பள்ளிக்கூடத்தையும் ஓர் சோனகன் வைத்திருந்த இறைச்சிக்கடையையும் தீயிட்டழித்து, பட்டினமத்தியிலரசாட்சியாருண்டாக்கியிருந்தபூந்தோட்டத்தையும் பாழாக்கினர். இலங்கையின் பூர்வீகநகரஆராய்ச்சிகள் நடத்துபவராகிய மெஸ். பெல் புத்தசமயக்கோவில்கள் விகாரைகளுட்புகுந்து கிண்டிப்பரிசோதனைகள் செய்வதிற்புத்தசமயிகள் பொதுவாய் விசனமுற்றிருக்கிறார்கள். இவருடையவீடும், பட்டினமத்தியிலுண்டாக்கப்பட்டிருக்கும் பூக்தோட்டமும், புத்தஆலயத்துக்குரிய நிலத்திலுண்டாக்கப்பட்டிருக்கின்றனவென்பதும் அவர்கள் விளக்கம். இவ்வகையாயப் பொதுவில் விசனமுற்றிருந்த புத்தசமயிகள், மேற்குறித்ததினத்திற் கச்சேரிமுதலியார் மெஸ். அமரசேகர ஏறிச்சென்றவண்டியின்குதிரை, யாத்திரைக்குவந்தவோர் மனுஷியின் காலை உழக்கியதைக்காலாய்க்கொண்டு கலகஞ்செய்யஆரம்பித்தனர். அறுபதுக்குமேற்பட்டோர் கலகத்திற்சம்பந்தப்பட்டோராய்ப் பிடிக்கப்பட்டுவிளங்கப்படுகின்றனர். கச்சேரிமுதலியார் கவலையீனமாய்க் குதிரைசெலுத்தியதிற் தாங்குற்றவாளியென ஒப்புக்கொண்டு 60 ரூபாதண்டம் விதிக்கப்பட்டனர். அதில்அரைவாசி காயமடைந்தமனுஷிக்குக்கொடுக்கப்பட்டது.

சேர்வியாக்கலகம்.—Servia.—ஐரோப்பிய துருக்கையின் வடமேற்குப்பாகத்திலிருப்பதாகிய சேர்வியாநாட்டின் சனங்கள் சிலர் தங்கள் இராசாவாகிய அலெக்சந்தரையும் மனைவியாகிய இராணியையும் அவர்களின் மந்திரிமார் சிலரையும ஒரு ராத்திரியிற் கொலைசெய்துவிட்டார்கள். அலெக்சந்தர் அரசர் பொதுவானவோர் நாட்டவனின் மகளை விவாகஞ்செய்து ராணியாக வைத்துத் தமது சுயேஷ்டப்பிரகாரம் சிலகாரியங்களை நடப்பித்ததாற் சனங்கள் மிகவும் விசனமுற்றிருந்தார்கள். இப்போது அந்த ராணி தனது இனத்தவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுப்பித்து அவர்களிலொருவனைத் தமக்குப் பின் பட்டத்துக்குரியவனாக்கத் தெண்டித்தனளென்னும் விளக்கத்தினாலேயே சனங்கள் இக்குரூரசெயலிற் கையிட்டனராம். அந்தநேரத்திற் சுவிற்சர்லந்து தேசத்திற்குப்போயிருந்தவரான காரஜோர்ச்விச் என்பவரை மந்திரசபையார் ராசாவாகத்தெரிவுசெய்து அழைக்க அவர் அவ்விடம்வந்து ராச்சியபாரத்தைக் கையேற்றிருக்கின்றனர். ருஷிய, அவுஸ்திரிய ராசாங்கத்தவரும இம்மாறுதலிற் பிரியங்காட்டியிருக்கின்றனர். சேர்வியாவுக்கயல்நாடாகிய பால்க்கன் நாட்டிலுள்ளார் துருக்கிசுலுத்தானுக்கெதிராய்ச் செய்யுங்கலகம் இன்னும் அமர்த்தப்படவில்லை.

## கடிதம்.

### சிலங்கூரிலே நடைபெற்ற

### ஓர் யாழ்ப்பாணக் கிறிஸ்தவிவாகம்.

இந்த மீ 3 தேதி புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்குக்கோலாலம்பூர் அமரிக்க மெதடிஸ்ற்மிஷன் ஆலயத்திலே ஒரு விவாகம் நடைபெற்றது. மணமகன், உரும்பராய்வாசரும், கோப்பாய் வித்தியாசாலைத்தலைமை ஆசிரியர் மெஸ். தம்பாபிள்ளையவர்களின் மருகரும், சிலங்கூர்ப்புகைரதப்பகுதித்தலைமைக் கிளாக்மாருளொருவருமாகிய ள. ள. ஸ்ரீ. எஸ். மாணிக்கம், மணமகள், உரும்பராய், ஊரெழு, கோப்பாய் வடக்கு என்னும்முக்குறிச்சிகளுக்கும் பலவருடங்களாய் விதானையாகவும் உடையாராகவும் பகுதிப்பராபத்தியமாயுமிருந்து காலஞ்சென்ற ள. ள. ஸ்ரீ. அ. சிதம்பரநாத உடையாரவர்களின் பௌத்திரியும், கோலாலம்பூர் அமரிக்கமிஷன் தமிழ்ச்சபைத்தலைவராகிய கனம். எஸ். ஆபிரகாம்போதகரின் புத்திரியுமாகிய மிஸ். விக்ரோறியா இராசம்மை. சுற்றமித்திரர், இந்தியபிரபுக்கள், செட்டிப்பிள்ளைகள், ஐரோப்பியர் முதலியபிரபுக்களினாலே ஆலயமானது நிரம்பி வழிய, மாஸ்றர் உவில்லியம் ஆபிரகாமை மணவாளதோழனாகவும்(Bestman), மெஸ். கேபிரியேல் என்பவரைச்சாமானியதோழனாகவும் (Groomsman), இரட்டைக்குதிரைபூட்டியரதாரூடராய் மணமகனும், உரும்பராய் மிசிஸ். சி. நன்னித்தம்பியைத்தோழியாயும், மிஸ். ரேஸ்ஸ்பிரகாம், மிஸ். மேரம்மா அப்பருவு என்பவர்களை இளந்தோழிகளாயும் (Flower Girls), இரட்டைக்குதிரைபூட்டிய இன்னோரிரதவழியாய்த் தந்தையாரின் வலக்கரத்துளணைக்கப்பட்டபடி மணமகளுமாய் இருபகுதியாரும் 5 மணியளவில் ஆலயத்துட்பிரவேசித்தனர். விவாகாராதனை கனம். கோர்லி ஐயரவர்களாலும் கனம். ஆபிரகாம்போதகராலும் மிகுபயபத்தியாய் நடத்தப்பட்டது. அத்தருணத்திற்கென்றியற்றப்பட்ட இனிய சிறந்த செந்தமிழ்ப்பாக்களை மெஸ். அப்பாத்துரை, கந்தையா என்பவர்கள் இன்னிசையாய்ப்பாடிச் சமுகமாயிருந்தோர்மனதைப்பரவசப்படுத்தினர். விவாகப்பதிவையிறைவேற்றி இருவரும்வெளிவரவே, உரும்பராய் மெஸ். இ. மயில்வாகனம் என்பவர் தாம் ஆயத்தஞ்செய்திருந்தபூமாலைகளில்ஒன்றை மணவாளனின்கழுத்திற்சூட்டி, மற்றமாலையை மணமகளது கையிற்கொடுக்க, அதனை அவர் வாங்கி மணமகளதுகழுத்திற் சூட்டினர். 'உவெடிங்மார்ச்'' என்னும் இராகம்வீணையிற் பாடப்பட, இருபெருமாய்த்தோழதோழிகள் புடைசூழ இரதமீறேறி ஊர்வலஞ்சுற்றி உபசரணைமண்டபத்தைக்கிட்டினர். உடனே, மணமகளது மாதுலரும் சிலங்கூர் அரசாட்சி உதவிசேர்ச்சன்மாருள் ஒருவருமாகிய, டக்தர் மெய்க்கின்ரூயரும் அவர்பாரியுமாய் எதிர்நின்று இருவருக்கும் கைகொடுத்து அழைத்துவந்து மண்டபத்துளிருத்தினர். சமுகமாயிருந்த ஐரோப்பியர் இங்கிலிசில் ஒருபாட்டைப்பாட, மணமகளினால் விவாககேக்குவெட்டப்பட்டது. பின்னர் கனம். ஐயரவர்கள் எழுந்து, விவாகஞ்செய்த இருவருக்கும் சுகசோபனவாழ்த்துரைகள்கூறி, இவ்விவாகத்திலேதமக்கு மிக்க சிரத்தையுண்டென்றும், இவ்விததருணங்களிலே அநேகர்செய்வதுபோல யாதொருவெறிப்பானத்தையும் உபசரணைக்காய் இவர்கள் உபயோகியாமலிருப்பது தமக்குச் சந்தோஷமென்றும், இந்நன்முன்மாதிரியை யாரும்பின்பற்றல் வேண்டுமென்றும்பேசினர். உடனே மணவாளனெழுந்து, ஐயரவர்களுக்கும் மற்றும்யாவருக்கும் நான் நன்றிபாராட்டுகிறேனென்றும், பரமபிதாவானவர் எனக்கு ஒரு உத்தமமனைவியைக்கிடைக்கச்செய்ததற்காய் அவர்க்கு விசேஷ துதிசெலுத்துகிறேனென்றும் பேசினர். அப்பால் எஸ். பி. ஜி. தமிழ்ச்சபையின்தலைவராகிய கனம். வேதநாயகம் போதகர் எழுந்து மணமகளின் பிதா மாணக்கனாயிருந்த காலமுதலாய் நான் அறிவேனென்றும், படிப்படியாய் அவரைத்தேவனுயர்த்திவந்து ஈற்றிலே எத்தொழிலுக்கும் மேலானதாகிய குருத்தொழிலுக்குக்கொண்டுவந்திருக்கிறாரென்றும், மாப்பிள்ளைசன்மார்க்கநடையுள்ள ஒரு சிறந்த வாலிபனென்றும், இங்கேயுள்ள அநேகவாலிபர்செய்வதுபோலத்தமது உழைப்பிலே ஒருசிறுபாகத்தையாகுதல் துர்விஷயத்துக்காய்ச் செலவழித்ததில்லையென்றும், மணமகளின் பாட்டனாராகிய காலஞ்சென்ற ள. ள. ஸ்ரீ. நல்லதம்பி மெய்க்கின்ரூயரும் எனக்குப்பழக்கமுள்ளவரென்றும் அவர் ஒருசிறந்த தெய்வபத்தியானென்றும், அவரதுகுடும்பத்தைச்சேர்ந்தோராய் அநேகர் இலங்கையிலே வைத்தியராயிருக்கின்றனரென்றும்பேசினர். அதன்பின் யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கப்புலவருள் ஒருவரும், "உதயபானு" பத்திராதிபரும், இந்துப் பிரசங்கியுமாகிய ள. ள. ஸ்ரீ. சு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள் எழுந்து மணமகளின் தந்தையார் ஒருதச்சப்பிரபுவின்பிள்ளையென்றும், தமிழ்அறிவிலே வல்லவரென்றும், அவர்கிறிஸ்தவனாதற்கு முன்னொடங்கித்தமக்கு நெருங்கிய நட்பினையுடையவரென்றும், அவரது மனைவியும் விசேஷம்பெற்ற ஒரு "குணசாலியானஸ்திரி"யென்றும், இவர்குணஞ்செயலாற்றல்போலவே இவர்களது பிள்ளைகளுமிருப்பார்களென்றும், மணமகனும் இதற்குமுன்னும் போதகர் அவர்களுக்கு மருகராயிருத்தலின் மாதலர்குணஞ்செயலாற்றல்கள்மருகர் பாலமைந்திருத்தல் பெருவழக்காதலின் நல்லொழுக்கமுள்ள ஒருவரேயென்பது கூறுதேயமையுமென்றுப்பேசி "காவலனே பாவையர்க்கழகு" "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" யென்பனவற்றைப் பீடிகையாகக்கொண்டு இல்லறத்தைக்குறித்துப்பேசித்தம்பதிகளிருவரும் குன்றாதவாழ்வையுங்குறைவற்ற செல்வப்பெருக்கையும், சற்புத்திரரையும்பெற்று, உலகத்துக்கும்தமக்கும் பேருபகாரிகளாக நீடூழிவாழ்கவெனச்சபையாரெல்லாம் மகிழுமாறு மிக்கசாதுரியத்தோடு பேசிமுடித்தனர்.

முடிவிலே கனம். ஆபிரகாம்போதகர் எழுந்து, சமுகமாயிருந்தோர்யாவருக்கும் வந்தனமுரைக்க தம்பதிகளிருவரும் அம்மண்டபத்தைவிட்டுப்புறப்பட்டுநிலபாவாடைமீதுநடந்து மணமகளதுவீட்டைநோக்கினர். தமிழருக்குரிய விருந்து ஒன்பதுமணியளவிலும், ஐரோப்பியருக்குரிய விருந்து காலாம் நாளிரவேழுமணியளவிலும் நடைபெற்றது. மணமகனுக்கும், மணமகளுக்கும், பெற்றோருக்கும் சிநேகிதராலுபகாரங்களனுப்பப்பட்டன.

இப்புதியகுடும்பத்தைத் தேவனாசீர்வதிப்பாராக.

கோலாலம்பூர்

1903 ஆனி மீ 10 உ. (சழிதன்)

## Foreign News.

A terrible tragedy has taken place in Servia. The King and Queen and several others were assassinated at midnight by men belonging to the army. Peter Karageorgevich who was in Switzerland at the time was elected king amid the rejoicings of the people. The murdered King, Alexander, was but 27 years of age and had been married but two or three years. His wife, Queen Draga, was very unpopular, and her influence over her husband was none of the best. Matters have been going from bad to worse, and the king has not attempted to please his people, but in various ways irritated them until they took the law in their own hands and committed the dastardly deed which has horrified all Europe. England has refused to recognize the new Government and has recalled her minister. France, Germany and Italy have shown strong disapproval. Russia has ordered mourning for 24 days for the Servian sovereigns and has intimated to the new King that justice demands the punishment of the assassins. At first it was feared that this tragedy might precipitate a general European war, but there seems no danger of that now.

—:o:—

Mr. Chamberlain's position in regard to preferential duties is the absorbing topic of conversation in England and political parties are so mixed up that it would be risky to fortell what the final outcome may be. England has always stood for free trade while her colonies have followed a moderate protection policy. It would not be strange if some radical changes took place in party politics in the next five years. The Education Bill is dragging its course through Parliament, but has undergone so many changes that even its best friends would find it difficult to recognize it.

A terrible explosion took place at the Woolwich Arsenal in which 15 men were killed and 14 injured. The cause of the explosion is unknown. An inquiry has been ordered.

—o—

In the United States and Canada great losses have occurred through storms and fires. The forest fires in the eastern part of the United States and in Canada resulted in great destruction to property. Heavy rains finally put out the fires. In one part of the west over 600 square miles were inundated, many lives were lost and much property destroyed. In Georgia, in the South, a tornado in a few minutes demolished churches and scores of cottages. The total loss figures up into millions of pounds sterling.

## Man's Place in the Universe.

*[Concluded ]*

In reply to the second question, could the higher forms of the organic life such as we find on earth have originated and been developed on any other planet, Mr. Wallace thinks no other planet can fulfil the conditions i. e. that no other planet is habitable by mankind.

In the first place for the development and support of human life we must have favorable conditions of temperature. We must have a degree of heat which shall never for any considerable time fall below 0°c, nor go above say 75°c and that these narrow limits must be continuously maintained not for hundreds or thousands only but for millions of years, if life is to be developed there. The earth has had especially favorable conditions for the right temperature. They are as follows:

1. Just the right distance from the sun to heat the soil and produce clouds, rain and rivers.

2. The Atmosphere is sufficient and just dense enough to allow of circulation of clouds and equalize the sun's heat. The amount of atmosphere is dependent on the mass of a planet so Mars one-eighth of the size of the earth is probably quite unsuitable for human beings.

3. A large part of the earth's surface is covered with oceans whose tides and currents are agents in equalizing the temperature. Venus has no moon to cause tides which may be enough to make Venus uninhabitable.

4. The oceans by their depth appear to have been "permanent features of the earth's surface" so the present conditions have existed for a long period while life has been developing. Such a condition probably is not found elsewhere.

5. We find that the deserts and volcanoes found on the earth have a purpose. Dust is essential for the formation of rain clouds and the deserts and volcanoes furnish the dust. If they were taken away the earth would surely be much less enjoyable and might be uninhabitable. Now it seems that the earth is unique for we are almost certain these conditions are not found in any other planet.

But it may be asked why some of the planets of some of the other systems in the "Milky Way" cannot possess these conditions. Because the outer margin of the stellar universe is unstable. Many of these stars must be escaping from the attractive force of their neighbors and are flying off into space as molecules of unconfined gas fly off.

Again we are led to believe, he says, "it is almost certain that at any considerable distance beyond the central portion of the universe gravitation would vary in intensity in different directions."

Moreover there is reason to doubt whether the proper electrical conditions exist in those regions on the outer edge of the stellar universe. We know that these electrical forces play an important part in the life of man.

"We can hardly suppose any longer that three such remarkable coincidences of position and consequent physical conditions should occur in the case of the one planet on which organic life has been developed without any causal connection with that development. The three startling facts, that we are in the center of a cluster of suns, and that that cluster is situated not only precisely in the plane of the Galaxy, but also centrally in that plane, can hardly now be looked upon as chance coincidences without any significance in relation to the culminating fact that the planet so situated has developed humanity."

In giving reasons for his answer to the second question Mr. Wallace is much less satisfactory than in the first. There is less definite information. This is merely a theory of probabilities.

## MINUTE BY THE GOVERNOR.

[Extract from the "Ceylon Government Gazette" No.5,926 of June 12, 1903.]

His Excellency the Governor desires that public expression may be given to the regret caused by the death of Mr. Kanakanayagam Charles Barr Kumarakulasinkam, Modr. of the Governor's Gate, Tamil Interpreter to the Governor and the Chief Tamil Translator to Government. The late Mr. Kumarakulasinkam entered the Public Service in 1886, and by his personal character and loyalty to Government did honour to the community to which he belonged, and has left behind him an example which His Excellency trusts will serve as an encouragement to younger generations of his countrymen.

By His Excellency's command,

Colonial Secretary's office  
Colombo, June 9, 1903.

EVERARD IM THURN,  
Colonial Secretary.

### Riot at Anuradhapoora.

The city of the ancient kings has been the scene of a disgraceful exhibition of religious frenzy. During a special Buddhist festival when the town was crowded with pilgrims, an accident took place which aroused the fury of the people and they attacked the R. C. mission premises, destroying property valued at Rs. 9000. The park opposite the Temple of the Bo-tree was demolished and the medical quarters largely injured. The Govt. has put in a claim of Rs. 900 and the medical department of Rs. 1000. Over 50 said to be concerned in the riot have been arrested and the trial is still going on. Fortunately no lives were lost though a few were injured. Nothing is gained by calling the rioters Boxers"—what is needed is a firm, impartial hand to prevent the recurrence of similar scenes.

### Straits Settlements.

Rev. S. Abraham of Kuala Lumpur writes as follows of his work there in the "Malaysia Message" of May 1903;—

"Since Conference I have had the pleasure of admitting four as probationers, two as full members, and of baptizing an old Hindu mother at the Easter special service. Though uneducated she is, very intelligent and strong in her faith that Jesus is her Saviour. She withstood the efforts of some people for several months to dissuade her from being baptized.

An earnest young man of our church in giving us $ 11 to be spent for cloths for the communion table, said it was one-tenth the price of his bicycle, which, having been stolen was restored to him by the police.

The revival services conducted by the Bishop brought forth splendid results among the Tamils. In the short after-services held daily chiefly for Tamils, many prayed earnestly and declared that they had found a peace and joy which they never had before. A Hindu young man rose and professed conversion, and declared his willingness to be baptized. In one of the meetings for children eight Hindu children of the Anglo-Tamil School and most of the children of our Tamil Junior League knelt down prayed, and told the Bishop they were saved. The Hindu children said they were ready to be baptized, and it was decided with the Bishop's advice, to baptize them after getting the advice of the parents or guardians.

Our Tamil Junior Epworth League had a social in honour of Bishop Warne on the evening of the 26th. Among others present where Mr. and Mrs. Robertson, of the Federated Engineering Company, who have always had sympathy with our Tamil work since it was started by their friend Dr. Kensett. The Bishop was very much pleased with the little League, and thanked Miss Anderson for having started it. Rev. W. E. Horley, who occupied the chair for the occasion, spoke a few words and encouraged the young officers of the League.

The revival services were followed on Sunday by the communion service conducted by the Bishop. At it close the pastor and his wife invited the Tamil women and children to their house, when the Bishop baptized Edith Mary, their four-days-old baby.

Some of the young men who were stirred up by the special meetings are forming a class for the study of the word of God, and to help the pastor in evangelistic work.

My assistant, Mr. Ponniah, having been transferred to take charge of the Tamil work in Singapore. I am fortunate in getting Mr. Appa Durai, a young man from C. M. S. Trainingschool at Kopay, Ceylon. I hope with God's help to accomplish more this year and pray for special blessing upon our work."

### CHRISTIAN—BRAHMO—CHRISTIAN.

An interesting and most touching event occurred at the Naulakha Presbyterian Church on a recent Sunday, when Mr. Ram Chandra Baunerjea with his family returned to the fold of the Christian faith. Mr. Baunerjea was baptized in 1870 by the late Bishop French, and continued in the Church until 1885, when he renounced the Christian faith and joined the Bramo Somaj. His wife, ever faithful to her husband, yet remainad constant in her faith in Christ. Mr. Bannerjea explains his lapse from the faith, by reference to the influence of sceptical and Unitarian Literature. After eighteen years, he was led to pass through deep waters of affliction. A beloved daughter lay upon her dying bed. She too had followed her father in his change of faith, But now she came to realize her need of an Almighty Saviour, and under the influence of her mother and some Christian friends, she found again in Jesus Christ that peace which passeth all understanding. Then it was that seeking to fulfil the command of her Lord, she asked to be permitted to partake the Lord's Supper. In company with her mother and a younger sister and a few Christian friends, the Holy Communion was celebrated; and with a shining face, the dying Christian said: "I have now perfect peace." During the remaining days, her one great desire was to see her father return to the Christian faith. Accordingly on the Sunday following the death of his daughter, Mr. Bannerjea with his entire family formally united with the Church. His son Mr. Satya Prakash received the rite of baptism at the hand of the pastor, Rev. Talibuddin. One, writing of the solemn event, says: "Mr. Baunerjea is a fine man: one who has always tried to act up to his convictions. In the death of his daughter, he had, as it were, a vision of Jesus once crucified but now living in glory. He was not disobedient to this heavenly vision."

*"Christian Patriot."*

### Gift of an Indian Christian.

At the annual meeting of the Woman's Auxiliary of the Wesleyan Missionary Society, Mrs. Wiseman announced that Mr. Subramanyam the Administrator-General of Madras, has offered Rupees twenty-five thousand towards a women's hospital in Madres, as well as promised to support five beds and give any other help, provided that the Society was able to set apart a lady doctor. This is as it should be. and we hope Mr. Subramanyam's excellent example will be followed by similar gifts by Indian Christians. Mrs. Wiseman calls for the services of a lady doctor.

*"Christian Patriot"*

## NOTES.

**The Birthday Cake.** of the British and Foreign Bible Society weighed 99lbs this year—one lb for each year of the Society's existence. It was cut by the little daughter of the Lord Mayor of London.

**Mr. Carnegie.** has offered some educational experts in New York a grant of £ 2000 a year as long as was needed to finance a movement for devising a phonetic alphabet so that words, could be spelled as pronounced.

**The word's typewriting Record** is claimed by Miss. Mary Pretty, a clerk in the Patent office at Washington, who has accomplished the remarkable feat of typing 20,400 words in six hours. She had only ten minutes rest and refreshed herself with beef tea and bananas.

**Sleepless creatures.** There are several species of fish, reptiles, and insects which never sleep during the whole of their existence. Among fish it is positively known that pike salmon and goldfish never sleep at all, also that there are several others in the fish family that never sleep more than a few minutes a month. There are dozens of species of flies which never indulge in slumber; and from three to five species of serpents which also never sleep

**A Tell-Tale Envelope.** An American has invented an envelope which records of itself any attempt to tamper with its contents. The flap is imbued with some chemical composition which, when operated on by a dampening process or any other means of penetrating to its enclosure, records the transaction by causing the words "Attempt to open" to appear.

**Soporific Grass.** In some parts of New Mexico there grows a grass which produces a somniferous effect on the animals that graze upon it. Horses after eating the grass in nearly all cases sleep standing, while cows and sheep almost invariably lie down,

**Monkey Language.** Professor Garner thinks he has the whole monkey language in seven words; "Whoo-w" food; "chew-y" drink; "I-eegk," peril, assault; "eh in" something approaches; "yoo-hw" come hither; oa-ah" friendship, love; "Nwah," good, or it is well. Several incidents are given to illustrate and prove his theory.

**A Pharaoh's Tomb.** The tomb of one of the Pharaohs of the eighteenth dynasty, Thotmes IV. who lived between 3,000 and 4,000 years ago, has been discovered at Thebes.

It contained the chariot in which the king rode, and a number of mummified loins of beef, legs of mutton and trussed ducks and geese.

Printed at the Press of Strong and Asbury, Manepay,
Published by A. C. Mission and Tambaiah Strong Cooke